# உங்களுக்கு
# நுண்ணுயிர் எதிர்ப்பிகள
# பரிந்துரைக்கப்பட்டால்...

## அவற்றைச் சரியான முறையில் கையாளுங்கள்

### பின் வருவனவற்றை கவனத்தில் கொள்ளுங்கள்

**மருத்துவரால் பரிந்துரைக்கப்பட்ட மருந்தின் அளவு மற்றும் கால அளவினை முறையாகப் பின்பற்றவும்.**
உங்களுக்காகவே பிரத்தியேகமாக பரிந்துரைக்கப்பட்ட நுண்ணுயிர் எதிர்ப்பியின் அளவு அதிகபட்ச பலனை அளிக்கும். ஒரு சில நாட்களுக்குப் பின்னர் நோய் குணமாகிவிட்டது போல் தோன்றினாலும் மருந்தினை இடையில் நிறுத்த வேண்டாம்.

**ஒரு வேளை மருந்து உட்கொள்ளுவதைக்கூட தவறவிட வேண்டாம்.**
இடையில் ஒரு வேளை மருந்து உட்கொள்ள மறந்தாலும்கூட தொற்று நீடிக்கலாம் அல்லது குணமாவது பாதிக்கப்படலாம். பக்கவிளைவுகள் ஏதேனும் தோன்றினால் உடனே உங்கள் மருத்துவரையோ அல்லது மருந்துச்சாலை ஊழியரையோ அணுகவும்.

**உங்களுக்கு அளிக்கப்பட்ட நுண்ணுயிர் எதிர்ப்பிகளை பிறருடன் பங்கிட வேண்டாம்.**
உங்களுடைய சிகிச்சை உங்களுக்கு பரிந்துரைக்கப்பட்டது. அது உங்களுடைய தனிப்பட்ட தேவைக்கானது.

**இடையில் நிறுத்தியதால் மீதமான மருந்தினை திரும்பக் கொண்டு வாருங்கள்.**
நுண்ணுயிர் எதிர்ப்பிகளை வீட்டுக்குப்பையில் சேர்த்துப் போடுவதினால் அவை சுற்றுப்புறச் சூழலில் (உ.ம். கழிவுநீர்) வந்தடையும். பிறருக்கு வழங்குவதற்காக ஒருபோதும் நுண்ணுயிர் எதிர்ப்பிகளைப் பத்திரப்படுத்தி வைக்காதீர்கள்.

## நுண்ணுயிர் எதிர்ப்பிகள்

### முக்கியமான தகவல்கள்

நுண்ணுயிர் எதிர்ப்பிகள் பாக்டீரியாக்களை கொல்லவோ அல்லது அவற்றின் வளர்ச்சியைத் தடைசெய்யவோ பயன்படும் மருந்துகள். இவை மனிதர்கள் மற்றும் மிருகங்களுக்கு ஏற்படும் தொற்றுக்களை குணப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றன. பல்வேறு நோய்களுக்குப் பலவிதமான நுண்ணுயிர் எதிர்ப்பிகள் தேவைப்படும். வைரஸ் தொற்றுகளுக்கு எதிராக (உ.ம். தடிமல்) இவை செயல்படமாட்டா.

மேலும் தகவல்களுக்கு உங்கள் மருத்துவரையோ, பல் மருத்துவரையோ அல்லது மருந்துச்சாலை ஊழியரையோ அணுகவும்.

**www.antibiotika-richtig-einsetzen.ch**

« நுண்ணுயிர் எதிர்ப்பிகளை முறையாகக் ளகயாளுவதின் மூலம் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள். »

நுண்ணுயிர் எதிர்ப்பிகளை
முறையாகப்
பயன்படுத்துதல்

# உங்களுக்கு நுண்ணுயிர் எதிர்ப்ப பரிந்துரைக்கப்படவில்லையெனில்...

## முக்கியம்

### இதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும்.

**பாக்டீரியா தொற்றுகளுக்கு எதிராக மட்டுமே நுண்ணுயிர் எதிர்ப்பிகள் செயல்படும்.**
ஒரு சில பாக்டீரியா தொற்றுகள் நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் தேவை இல்லாமல் குணமாகக் கூடியவை. தேவைப்பட்டால் மட்டுமே உங்கள் மருத்துவர் உங்களுக்கு நுண்ணுயிர் எதிர்ப்பிகளை பரிந்துரைப்பார். வைரஸ் தொற்றுகளுக்கு எதிராக (உ.ம். காயச்சல், தடிமல்) நுண்ணுயிர் எதிர்ப்பிகள் செயல்படமாட்டா.

**பல சமயங்களில் நம் உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியே போதுமானது.**
ஆரோக்கியமான உடலானது தொற்றுகளை எதிர்க்கும் தன்மை கொண்டது. உதாரணமாக காய்ச்சல் என்பது நம் உடல் தொற்றுகளை எதிர்ப்பதற்கான ஒரு அறிகுறியாகும்.

**நுண்ணுயிர் எதிர்ப்பிகளைத் தவறாகப் பயன்படுத்துவதினால் பாக்டீரியாக்களுக்கு எதிர்ப்புத்தன்மை உருவாகலாம்.**
எதிர்ப்புத்தன்மை கொண்ட பாக்டீரியாக்களுக்கு எதிராக நுண்ணுயிர் எதிர்ப்பிகள் செயல்படாது. இதனால் தொற்றுகளை குணப்படுத்துவதில் சிரமம் ஏற்படலாம் அல்லது இயலாமல் போகலாம்.

**நுண்ணுயிர் எதிர்ப்பியினாலும் தீங்கு நேரலாம்.**
பொருத்தமற்ற நுண்ணுயிர் எதிர்ப்பியின் பயன்பாடு தேவையற்ற விளைவுகளை உருவாக்கும், உ.ம். பயனுள்ள பாக்டீரியாக்கள் தாக்கப்படும் அல்லது அவை எதிர்ப்புத்தன்மை உருவாக்கிக் கொள்ளலாம்.

## எதிர்ப்புத்தன்மை

### பாக்டீரியாக்களுக்கு எதிராக நுண்ணுயிர் எதிர்ப்பிகள் செயல்படாமல் போனால்

நுண்ணுயிர் எதிர்ப்பிகளுக்கு எதிரான எதிர்ப்புத்தன்மை என்பது பாக்டீரியாக்களுக்கு எதிராக நுண்ணுயிர் எதிர்ப்பிகள் குறைவாக செயல்படுவது அல்லது செயல்படாமல் போவது ஆகும். தேவையற்ற அல்லது அதீதமான நுண்ணுயிர் எதிர்ப்பி பயன்பாடு எதிர்ப்புத்தன்மையை உருவாக்கலாம். எதிர்ப்புத்தன்மை கொண்ட பாக்டீரியாக்கள் பிறருக்கும் உதவக்கூடியவை.

மேலும் தகவல்களுக்கு உங்கள் மருத்துவரையோ, பல் மருத்துவரையோ அல்லது மருந்துச்சாலை ஊழியரையோ அணுகவும்.

**www.antibiotika-richtig-einsetzen.ch**

**நுண்ணுயிர் எதிர்ப்பிகளை முறையாகப் பயன்படுத்துதல்**

**இது இவர்களின் ஒரு கூட்டு முயற்சி**

pharmaSuisse
Schweizerischer Apothekerverband
Société Suisse des Pharmaciens
Società Svizzera dei Farmacisti

FMH

Schweizerische Zahnärzte-Gesellschaft
Société suisse des médecins-dentistes
Società svizzera odontoiatri
Swiss Dental Association
SSO

Kinderärzte Schweiz
Berufsverband Kinder- und Jugendärztinnen in der Praxis
Association professionnelle de la pédiatrie ambulatoire
Associazione professionale dei pediatri di base

pädiatrie schweiz
Die Fachorganisation der Kinder- und Jugendmedizin

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Eidgenössisches Departement des Innern EDI
**Bundesamt für Gesundheit BAG**

November 2018